


# நீதிக்களஞ்சியம்

# நீதிக் களஞ்சியம்

பதிப்பாசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

*வெளியிடுவோர்*
**எஸ். ராஜம்**
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1
**1959**

# நூன்முகம்

சிறுவர் சிறுமியர் கல்வி பயிலத் தொடங்கும் காலத்தே முதன் முதலாகத் தெரிந்துகொள்கிற 'ஆத்திசூடி' முதற்கொண்டு, இளைஞர் முதல் முதியோர் ஈறாக எல்லாரும் போற்றிவரும் எட்டு நீதி நூல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் ஔவை மூதாட்டியாரின் நீதி நூல்கள் நான்கு. அவை யாவன: ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி. இவற்றுள் ஆத்திசூடி முதலிய முதல் மூன்றும் தொடக்கப் பாடலின் முதற் குறிப்பால் பெயர் பெற்றவை. 'வாக்குண்டாம்' என்பது 'மூதுரை' என்னும் பெயராலும் வழங்கப்பெறும். ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும் தமிழில் வரும் மொழி முதல் எழுத்துக்களின் அடைவில் அமைந்துள்ள பாடல்களைக் கொண்டுள்ளன. இப் பாடல்கள் ஒற்றை அடியாக அமைந்த அறவுரைக் கட்டுரைகள்; இலக்கணங் களில் பயிலும் சூத்திரங்கள் போன்றவை. மூதுரையும் நல்வழியும் நான்கு அடி வெண்பாக்களைக் கொண்டவை.

அதிவீரராம பாண்டியரின் 'வெற்றி வேற்கை' கொன்றை வேந் தனைப் போன்ற பாடல் அமைப்பினை உடையது. சிற்சில பாடல்களில் இரண்டு அடிகளும், ஒருசில பாடல்களில் மூன்று அடிகளும் உள்ளன. 56, 17, 75-ஆம் பாடல்கள் முறையே 4, 5, 6 அடிகளை உடையனவாகக் காண்கின்றன. உலகநாத பண்டிதரின் 'உலக நீதி' பதின்மூன்று விருத்தப் பாடல்களைக் கொண்டது. முதற் பன்னிரண்டு பாடல்களின் இறுதி இரண்டு அடிகள் தவிர, ஏனைய அடிகள் எல்லாம் தனித்தனி நீதி வாக்கியங்களாகவே அமைந்துள்ளன.

'நீதிநெறி விளக்க'மும் 'நன்னெறி'யும் ஔவையாரின் வாக்குண் டாம், நல்வழி போன்று நான்கு அடி வெண்பாக்களைக் கொண்டுள்ளன. நீதிநெறிவிளக்கத்தை ஆக்கியவர் குமரகுருபர சுவாமிகள். திருக்குறளின் சாரமாக இந் நூல் அமைக்கப்பெற்றது என்பர். நன்னெறியைச் செய் தவர் சிவப்பிரகாச சுவாமிகள். இந்த இரு பெரியார்களும் துறவு நெறியில் விளங்கிப் புகழ் சிறந்தவராய், மேலும் பல தமிழ் நூல்களை அளித்துள்ளார்கள்.

ஆத்திசூடி முதலிய இச் சிறு நூல்களிலும்கூட நூற்பெயர்களில் பிறழ்ச்சியும், பாடல்-தொகையில் மாறுபாடும், பாடல்களில் பல பாட வேறுபாடுகளும் உள்ளன. ஆயினும், இக்காலத்து வழங்கும் பாடல் களும் பாடங்களுமே இந் நூல்களில் மேற்கொள்ளப்பெற்றன.

# ஆத்திசூடி

(ஔவையார்)

கடவுள் வாழ்த்து

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம், யாமே.

## நூல்

அறம் செய விரும்பு. 1

ஆறுவது சினம். 2

இயல்வது கரவேல். 3

ஈவது விலக்கேல். 4

உடையது விளம்பேல். 5

ஊக்கமது கைவிடேல். 6

எண், எழுத்து, இகழேல். 7

ஏற்பது இகழ்ச்சி. 8

ஐயம் இட்டு, உண். 9

ஒப்புரவு ஒழுகு. 10

ஓதுவது ஒழியேல். 11

ஔவியம் பேசேல். 12

அஃகம் சுருக்கேல். 13

கண்டு ஒன்று சொல்லேல். 14

ஙப்போல் வளை. 15

சனி நீராடு. 16
ஞயம்பட உரை. 17
இடம் பட வீடு எடேல். 18
இணக்கம் அறிந்து இணங்கு. 19
தந்தை தாய்ப் பேண். 20
நன்றி மறவேல். 21
பருவத்தே பயிர் செய். 22
மன்று பறித்து உண்ணேல். 23
இயல்பு அலாதன செயேல். 24
அரவம் ஆட்டேல். 25
இலவம் பஞ்சில் துயில். 26
வஞ்சகம் பேசேல். 27
அழகு அலாதன செயேல். 28
இளமையில் கல். 29
அறனை மறவேல். 30
அனந்தல் ஆடேல். 31

கடிவது மற. 32
காப்பது விரதம். 33
கிழமைப்பட வாழ். 34
கீழ்மை அகற்று. 35
குணமது கைவிடேல். 36
கூடிப் பிரியேல். 37
கெடுப்பது ஒழி. 38
கேள்வி முயல். 39
கைவினை கரவேல். 40
கொள்ளை விரும்பேல். 41
கோது ஆட்டு ஒழி. 42
கௌவை அகற்று. 43

சக்கர நெறி நில். 44
சான்றோர் இனத்து இரு. 45
சித்திரம் பேசேல். 46
சீர்மை மறவேல். 47

சுளிக்கச் சொல்லேல். 48

சூது விரும்பேல். 49

செய்வன திருந்தச் செய். 50

சேர் இடம் அறிந்து, சேர். 51

'சை!' எனத் திரியேல். 52

சொல் சோர்வுபடேல். 53

சோம்பித் திரியேல். 54

'தக்கோன்' எனத் திரி. 55

தானமது விரும்பு. 56

திருமாலுக்கு அடிமை செய். 57

தீவினை அகற்று. 58

துன்பத்திற்கு இடம் கொடேல். 59

தூக்கி, வினை செய். 60

தெய்வம் இகழேல். 61

தேசத்தோடு ஒத்து வாழ். 62

தையல் சொல் கேளேல். 63

தொன்மை மறவேல். 64

தோற்பன தொடரேல். 65

நன்மை கடைப்பிடி. 66

நாடு ஒப்பன செய். 67

நிலையில் பிரியேல். 68

நீர் விளையாடேல். 69

நுண்மை நுகரேல். 70

நூல் பல கல். 71

நெற்பயிர் விளை. 72

நேர்பட ஒழுகு. 73

நைவினை நணுகேல். 74

நொய்ய உரையேல். 75

நோய்க்கு இடம் கொடேல். 76

பழிப்பன பகரேல். 77

பாம்பொடு பழகேல். 78

பிழை படச் சொல்லேல். 79

பீடு பெற நில். 80

புகழ்ந்தாரைப் போற்றி வாழ். 81
பூமி திருத்தி உண். 82
பெரியாரைத் துணைக் கொள். 83
பேதைமை அகற்று. 84
பையலோடு இணங்கேல். 85
பொருள்தனைப் போற்றி, வாழ். 86
போர்த்தொழில் புரியேல். 87

மனம் தடுமாறேல். 88
மாற்றானுக்கு இடம் கொடேல். 89
மிகைப்படச் சொல்லேல். 90
மீதூண் விரும்பேல். 91
முனைமுகத்து நில்லேல். 92
மூர்க்கரோடு இணங்கேல். 93
மெல் இல் நல்லாள் தோள் சேர். 94
மேன்மக்கள் சொல் கேள். 95
மைவிழியார் மனை அகல். 96
மொழிவது அற மொழி. 97
மோகத்தை முனி. 98

வல்லமை பேசேல். 99
வாது முன் கூறேல். 100
வித்தை விரும்பு. 101
வீடு பெற நில். 102
உத்தமனாய் இரு. 103
ஊருடன் கூடி, வாழ். 104
வெட்டெனப் பேசேல். 105
வேண்டி, வினை செயேல். 106
வைகறைத் துயில் எழு. 107
ஒன்னாரைத் தேறேல். 108
ஓரம் சொல்லேல். 109

# கொன்றை வேந்தன்

(ஔவையார்)

கடவுள் வாழ்த்து

கொன்றை வேந்தன் செல்வன் அடி இணை
என்றும் ஏத்தித் தொழுவோம், யாமே.

## நூல்

அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம். 1

ஆலயம் தொழுவது சாலவும் நன்று. 2

இல்லறம் அல்லது நல் அறம் அன்று. 3

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர். 4

உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு. 5

ஊருடன் பகைக்கின், வேருடன் கெடும். 6

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும். 7

ஏவா மக்கள் மூவா மருந்து. 8

ஐயம் புகினும், செய்வன செய். 9

ஒருவனைப் பற்றி, ஓர் அகத்து இரு. 10

ஓதலின் நன்றே, வேதியர்க்கு ஒழுக்கம். 11

ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு. 12

அஃகமும் காசும் சிக்கெனத் தேடு. 13

கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை. 14

காவல்தானே பாவையர்க்கு அழகு. 15

கிட்டாதாயின் வெட்டென மற. 16

கீழோர்ஆயினும், தாழ உரை. 17

குற்றம் பார்க்கின், சுற்றம் இல்லை. 18

கூர் அம்புஆயினும், வீரியம் பேசேல். 19

கெடுவது செய்யின், விடுவது கருமம். 20

கேட்டில் உறுதி கூட்டும் உடைமை. 21

கைப் பொருள்தன்னின், மெய்ப் பொருள் கல்வி. 22

கொற்றவன் அறிதல் உற்ற இடத்து உதவி. 23

கோட் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு. 24

கௌவை சொல்லின், எவ்வருக்கும் பகை. 25

சந்ததிக்கு அழகு, வந்தி செய்யாமை. 26

'சான்றோர்' என்கை, ஈன்றோர்க்கு அழகு. 27

சிவத்தைப் பேணின், தவத்திற்கு அழகு. 28

சீரைத் தேடின், ஏரைத் தேடு. 29

சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல். 30

சூதும் வாதும் வேதனை செய்யும். 31

செய் தவம் மறந்தால், கைதவம் ஆளும். 32

சேமம் புகினும், யாமத்து உறங்கு. 33

சை ஒத்து இருந்தால், ஐயம் இட்டு உண். 34

சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர். 35

சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர். 36

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. 37

தாயின் சிறந்த ஒரு கோயிலும் இல்லை. 38

திரை கடல் ஓடியும் திரவியம் தேடு. 39

தீராக் கோபம் போரா முடியும். 40

துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு. 41

தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும். 42

தெய்வம் சீறின், கைதவம் மாளும். 43
தேடாது அழிக்கின், பாடாய் முடியும். 44
தையும் மாசியும் வைஅகத்து உறங்கு. 45
தொழுது ஊண் சுவையின், உழுது ஊண் இனிது. 46
தோழனோடும் ஏழைமை பேசேல். 47

நல் இணக்கம் அல்லது அல்லற்படுத்தும். 48
நாடு எங்கும் வாழ, கேடு ஒன்றும் இல்லை. 49
நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை. 50
நீர் அகம் பொருந்திய ஊரகத்து இரு. 51
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி. 52
நூல் முறை தெரிந்து, சீலத்து ஒழுகு. 53
நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை. 54
நேரா நோன்பு சீராகாது. 55
நைபவர் எனினும், நொய்ய உரையேல். 56
நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர். 57
நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை. 58

பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும். 59
பாலோடு ஆயினும், காலம் அறிந்து உண். 60
பிறன் மனை புகாமை அறம் எனத் தகும். 61
பீரம் பேணி பாரம் தாங்கும். 62
புலையும் கொலையும் களவும் தவிர். 63
பூரியோர்க்கு இல்லை, சீரிய ஒழுக்கம். 64
பெற்றோர்க்கு இல்லை, சுற்றமும் சினமும். 65
பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம். 66
பையச் சென்றால், வையம் தாங்கும். 67
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர். 68
போனகம் என்பது தான் உழந்து உண்டல். 69

மருந்தே ஆயினும் விருந்தோடு உண். 70
மாரி அல்லது காரியம் இல்லை. 71
மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை. 72
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது. 73

முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும். 74

மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம். 75

மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு. 76

மேழிச் செல்வம் கோழைபடாது. 77

மை விழியார்தம் மனை அகன்று ஒழுகு. 78

மொழிவது மறுக்கின், அழிவது கருமம். 79

மோனம் என்பது ஞான வரம்பு. 80

வளவன் ஆயினும், அளவு அறிந்து, அழித்து, உண். 81

வானம் சுருங்கின், தானம் சுருங்கும். 82

விருந்து இலோர்க்கு இல்லை, பொருந்திய ஒழுக்கம். 83

வீரன் கேண்மை கூர் அம்பு ஆகும். 84

உரவோர் என்கை இரவாது இருத்தல். 85

ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு. 86

வெள்ளைக்கு இல்லை, கள்ளச் சிந்தை. 87

வேந்தன் சீறின், ஆம் துணை இல்லை. 88

வையம்தோறும் தெய்வம் தொழு. 89

ஒத்த இடத்து நித்திரை கொள். 90

ஓதாதார்க்கு இல்லை, உணர்வொடும் ஒழுக்கம். 91

# வெற்றி வேற்கை

(அதிவீரராம பாண்டியர்)

கடவுள் வாழ்த்து

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர் தலைக்கு அணிவோமே.

வெற்றி வேற்கை வீரராமன்,
கொற்கை ஆளி, குலசேகரன், புகல்
நல்-தமிழ் தெரிந்த நறுந்தொகைதன்னால்
குற்றம் களைவோர் குறைவிலாதவரே.

வாழிய, நலனே! வாழிய, நலனே!

## நூல்

எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும். 1

கல்விக்கு அழகு கசடு அற மொழிதல். 2

செல்வர்க்கு அழகு செழுங் கிளை தாங்குதல். 3

வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும். 4

மன்னர்க்கு அழகு செங்கோல் முறைமை. 5

வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல். 6

உழவர்க்கு அழகு இங்கு உழுது, ஊண் விரும்பல். 7

மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல். 8

தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை. 9

உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல். 10

பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல். 11

குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல். 12

விலைமகட்கு அழகு தன் மேனி மினுக்குதல். 13

அறிஞர்க்கு அழகு கற்று, உணர்ந்து, அடங்கல். 14

வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை. 15

தேம் படு பனையின் திரள் பழத்து ஒரு விதை
வான் உற ஓங்கி, வளம்பெற வளரினும்,
ஒருவர்க்கு இருக்க நிழல் ஆகாதே. 16

தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை
தெள் நீர்க் கயத்துச் சிறு மீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை,
அணி தேர், புரவி, ஆட் பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே. 17

பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர். 18

சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர். 19

பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர். 20

உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர். 21

கொண்டோர் எல்லாம் பெண்டிரும் அல்லர். 22

அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது. 23

சுடினும் செம் பொன் தன் ஒளி கெடாது. 24

அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது. 25

புகைக்கினும் கார் அகில் பொல்லாங்கு கமழாது. 26

கலக்கினும் தண் கடல் சேறாகாது. 27

அடினும் பால் பெய்து, கைப்பு அறாது, பேய்ச் சுரைக்காய். 28

ஊட்டினும் பல் விரை, உள்ளி கமழாதே. 29

பெருமையும் சிறுமையும் தான் தர வருமே. 30

சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம்
பெரியோர்ஆயின், பொறுப்பது கடனே. 31

சிறியோர் பெரும் பிழை செய்தனர்ஆயின்,
பெரியோர் அப் பிழை பொறுத்தலும் அரிதே. 32

நூறாண்டு பழகினும், மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க் கொள்ளாதே. 33

ஒரு நாள் பழகினும், பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே. 34

கற்கை நன்றே; கற்கை நன்றே;
பிச்சை புகினும், கற்கை நன்றே. 35

கல்லா ஒருவன் குல நலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே. 36

நாற்பாற் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின், கீழ் இருப்பவனே. 37

எக்குடிப் பிறப்பினும், யாவரே ஆயினும்,
அக் குடியில் கற்றோரை, 'மேல் வருக!' என்பர். 38

அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும். 39

அச்சம் உள் அடக்கி, அறிவு அகத்து இல்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின், அக் குடி
எச்சம் அற்று, ஏமாந்திருக்கை நன்றே. 40

யானைக்கு இல்லை, தானமும் தருமமும். 41

பூனைக்கு இல்லை, தவமும் தயையும். 42

ஞானிக்கு இல்லை, இன்பமும் துன்பமும். 43

சிதலைக்கு இல்லை, செல்வமும் செருக்கும். 44

முதலைக்கு இல்லை, நீத்தும் நிலையும். 45

அச்சமும் நாணமும் அறிவு இலோர்க்கு இல்லை. 46

நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை. 47

கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை. 48

உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா. 49

குடை நிழல் இருந்து, குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்து, ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர். 50

சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர். 51

அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடு இருந்து அரசாளினும் ஆளுவர். 52

குன்று அத்தனை இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர். 53

எழு நிலை மாடம் கால் சாய்ந்து உக்கு,
கழுதை மேய் பாழ் ஆயினும், ஆகும். 54

பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப் பாழ்
பொன் -தொடி மகளிரும் மைந்தரும் கூடி,
நெல் பொலி நெடு நகர் ஆயினும் ஆகும். 55

மண அணி அணிந்த மகளிர் ஆங்கே
பிண அணி அணிந்து, தம் கொழுநரைத் தழீஇ,
உடுத்த ஆடை கோடியாக,
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர். 56

இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே. 57

இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே. 58

நல்ல ஞாலமும் வானமும் பெறினும்,
எல்லாம் இல்லை, இல் இல்லோர்க்கே. 59

தறுகண் யானைதான் பெரிதுஆயினும்,
சிறு கண் மூங்கில் கோற்கு அஞ்சும்மே. 60

குன்றுடை நெடுங் காடுடே வாழினும்,
புன் தலைப் புல்வாய் புலிக்கு அஞ்சும்மே. 61

ஆரையாம் பள்ளத்தூடே வாழினும்,
தேரை பாம்பிற்கு மிக அஞ்சும்மே. 62

கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டின்
கடும் புலி வாழும் காடு நன்றே. 63

சான்றோர் இல்லாத் தொல் பதி இருத்தலின்,
தேன் தேர் குறவர் தேயம் நன்றே. 64

காலையும் மாலையும் நான்மறை ஓதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே. 65

குடி அலைத்து, இரந்து, வெங் கோலொடு நின்ற
முடியுடை இறைவனும் மூர்க்கனும் பதரே. 66

முதல் உள பண்டம் கொண்டு வாணிபம் செய்து,
அதன் பயன் உண்ணா வணிகரும் பதரே. 67

வித்தும் ஏரும் உளவா இருப்ப,
எய்த்து, அங்கு இருக்கும் ஏழையும் பதரே. 68

தன் மனையாளைத் தாய் மனைக்கு அகற்றி,
பின்பு அவட் பாராப் பேதையும் பதரே. 69

தன் மனையாளைத் தனி மனை இருத்தி,
பிறர் மனைக்கு ஏகும் பேதையும் பதரே. 70

தன் ஆயுதமும் தன் கையில் பொருளும்
பிறன் கையில் கொடுக்கும் பேதையும் பதரே. 71

வாய்ப் பறை ஆகவும், நாக் கடிப்பு ஆகவும்,
சாற்றுவது ஒன்றைப் போற்றிக் கேண்மின்; 72

பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால்,
மெய் போலும்மே; மெய் போலும்மே. 73

மெய்யுடை ஒருவன் சொல மாட்டாமையால்,
பொய் போலும்மே; பொய் போலும்மே. 74

இருவர் தம் சொல்லையும் எழு தரம் கேட்டே,
இருவரும் பொருந்த உரையார் ஆயின்,
மனு முறை நெறியின், வழக்கு இழந்தவர் தாம்
மனமுற மறுகிநின்று அழுத கண்ணீர்,
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்,
வழிவழி ஈர்வது ஓர் வாள் ஆகும்மே. 75

பழியா வருவது மொழியாது ஒழிவது. 76

சுழியா வரு புனல் இழியாது ஒழிவது. 77

துணையோடு அல்லது நெடு வழி போகேல்! 78

புணைமீது, அல்லது நெடும் புனல் ஏகேல்! 79

எழில் ஆர் முலை வரி விழியார் தந்திரம்
இயலாதன கொடு முயல்வு ஆகாதே. 80

வழியே ஏகுக! வழியே மீளுக! 81

இவைகாண் உலகிற்கு இயல்பாம் ஆறே. 82

# உலக நீதி

(உலகநாத பண்டிதர்)

## கடவுள் வாழ்த்து

உலக நீதி புராணத்தை உரைக்கவே,
கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு.

## நூல்

ஓதாமல் ஒரு நாளும் இருக்கவேண்டாம்;
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்;
மாதாவை ஒரு நாளும் மறக்கவேண்டாம்;
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்கவேண்டாம்;
போகாத இடந்தனிலே போகவேண்டாம்;
போகவிட்டு, புறஞ்சொல்லித் திரியவேண்டாம்;—
வாகு ஆரும் குறவருடை வள்ளி பங்கன்
மயில் ஏறும் பெருமானை வாழ்த்தாய், நெஞ்சே!

நெஞ்சு ஆரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்;
நிலை இல்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்;
நஞ்சுடனே ஒரு நாளும் பழகவேண்டாம்;
நல் இணக்கம் இல்லாரோடு இணங்கவேண்டாம்;
அஞ்சாமல் தனி வழியே போகவேண்டாம்;
அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்கவேண்டாம்;—
மஞ்சு ஆரும் குறவருடை வள்ளி பங்கன்
மயில் ஏறும் பெருமானை வாழ்த்தாய், நெஞ்சே!

மனம் போன போக்கு எல்லாம் போகவேண்டாம்;
மாற்றானை உறவு என்று நம்பவேண்டாம்;
தனம் தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம்;
தருமத்தை ஒரு நாளும் மறக்கவேண்டாம்;
சினம் தேடி, அல்லலையும் தேடவேண்டாம்;
சினந்திருந்தார் வாசல் வழிச் சேறல்வேண்டாம்;—
வனம் தேடும் குறவருடை வள்ளி பங்கன்
மயில் ஏறும் பெருமாளை வாழ்த்தாய், நெஞ்சே! 3

குற்றம் ஒன்றும் பாராட்டித் திரியவேண்டாம்;
கொலை களவு செய்வாரோடு இணங்கவேண்டாம்;
கற்றவரை ஒரு நாளும் பழிக்கவேண்டாம்;
கற்புடைய மங்கையரைக் கருதவேண்டாம்;
கொற்றவனோடு எதிர்மாறு பேசவேண்டாம்;
கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்;—
மற்று நிகர் இல்லாத வள்ளி பங்கன்
மயில் ஏறும் பெருமாளை வாழ்த்தாய், நெஞ்சே! 4

வாழாமல் பெண்ணை வைத்துத் திரியவேண்டாம்;
மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்லவேண்டாம்;
வீழாத படுகுழியில் வீழவேண்டாம்;
வெஞ்சமரில் புறங்கொடுத்து மீளவேண்டாம்;
தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்;
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்லவேண்டாம்;—
வாழ்வு ஆரும் குறவருடை வள்ளி பங்கன்
மயில் ஏறும் பெருமாளை வாழ்த்தாய், நெஞ்சே! 5

வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத் திரியவேண்டாம்;
மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்;
மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்;
முன்கோபக்காரரோடு இணங்கவேண்டாம்;
வாத்தியார் கூலியை வைத்திருக்கவேண்டாம்;
வழி பறித்துத் திரிவாரோடு இணங்கவேண்டாம்;—
சேர்த்த புகழாளன் ஒரு வள்ளி பங்கன்
திருக்கை வேலாயுதனைச் செப்பாய், நெஞ்சே! 6

கருதாமல் கருமங்கள் முடிக்கவேண்டாம்;
கணக்கு அழிவை ஒரு நாளும் பேசவேண்டாம்;
பொருவார்தம் போர்க்களத்தில் போகவேண்டாம்;
பொது நிலத்தில் ஒருநாளும் இருக்கவேண்டாம்;
இரு தாரம் ஒரு நாளும் தேடவேண்டாம்;
எளியாரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்;—
குருகு ஆரும் புனம் காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய், நெஞ்சே! 7

சேராத இடம்தனிலே சேரவேண்டாம்;
செய்த நன்றி ஒரு நாளும் மறக்கவேண்டாம்;
ஊரோடும் குண்டுணியாய்த் திரியவேண்டாம்;
உற்றாரை உதாசினங்கள் சொல்லவேண்டாம்;
பேரான காரியத்தைத் தவிர்க்கவேண்டாம்;
பிணைபட்டுத் துணை போகித் திரியவேண்டாம்;—
வார் ஆரும் குறவருடை வள்ளி பங்கன்
மயில் ஏறும் பெருமானை வாழ்த்தாய், நெஞ்சே! 8

மண் நின்று மண் ஓரம் சொல்லவேண்டாம்;
மனம் சலித்துச் சிலுகிட்டுத் திரியவேண்டாம்;
கண் அழிவுசெய்து துயர் காட்டவேண்டாம்;
காணாத வார்த்தையைக் கட்டுரைக்கவேண்டாம்;
புண்படவே வார்த்தைதனைச் சொல்லவேண்டாம்;
புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்கவேண்டாம்;—
மண் அளந்தான் தங்கை உமை மைந்தன், எம் கோன்,
மயில் ஏறும் பெருமானை வாழ்த்தாய், நெஞ்சே! 9

மறம் பேசித் திரிவாரோடு இணங்கவேண்டாம்;
வாதாடி வழக்கு அழிவு சொல்லவேண்டாம்;
திறம் பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம்;
தெய்வத்தை ஒரு நாளும் மறக்கவேண்டாம்;
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்;
ஏசலிட்ட உற்றாரை நத்தவேண்டாம்;—
குறம் பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்,
குமரவேள் நாமத்தைக்கூறாய், நெஞ்சே! 10

அஞ்சு பேர் கூலியைக் கைக்கொள்ளவேண்டாம்;
அது ஏது இங்கு என்னின், நீ, சொல்ல, கேளாய்:
தஞ்சமுடன் வண்ணான், நாவிதன், தன் கூலி;
சகல கலை ஓதுவித்த வாத்தியார் கூலி;
வஞ்சம் அற, நஞ்சு அறுத்த மருத்துவச்சி கூலி;
மகா நோவு தனைத் தீர்த்த மருத்துவன் தன் கூலி;—
இன்சொலுடன் இவர் கூலி கொடாத பேரை
ஏது ஏது செய்வானோ, ஏமன் தானே! 11

கூறுக்கி ஒருகுடியைக் கெடுக்கவேண்டாம்;
கொண்டைமேல் பூத்தேடி முடிக்கவேண்டாம்;
தூறுக்கித் தலையிட்டுத் திரியவேண்டாம்;
துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்கவேண்டாம்;
வீறான தெய்வத்தை இகழவேண்டாம்;
வெற்றி உள்ள பெரியோரை வெறுக்கவேண்டாம்;—
மாறான குறவருடை வள்ளி பங்கன்
மயில் ஏறும் பெருமானை வாழ்த்தாய், நெஞ்சே! 12

ஆதரித்துப் பல வகையால் பொருளும் தேடி,
அருந் தமிழால் அறுமுகனைப் பாடவேண்டி,
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி;
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்;
கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு
போதமுற்று, மிக வாழ்ந்து, புகழும் தேடி,
பூலோகம் உள்ளளவும் வாழ்வர் தாமே. 13

# வாக்குண்டாம்

*(ஔவையார்)*

கடவுள் வாழ்த்து

வாக்கு உண்டாம்; நல்ல மனம் உண்டாம்; மா மலராள்
நோக்கு உண்டாம்; மேனி நுடங்காது;—பூக் கொண்டு
துப்பு ஆர் திரு மேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## நூல்

நன்றி ஒருவற்குச் செய்தக்கால், 'அந் நன்றி
என்று தருங்கொல்!' என வேண்டா—நின்று
தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே; அல்லாத
ஈரம் இலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். 2

இன்னா, இளமை வறுமை வந்து எய்தியக்கால்;
இன்னா அளவில், இனியவும் இன்னாத;
நாள் அல்லா நாள் பூத்த நன் மலரும் போலுமே,
ஆள் இல்லா மங்கைக்கு அழகு. 3

அட்டாலும் பால் சுவையின் குன்றாது; அளவளாய்
நட்டாலும், நண்பு அல்லார் நண்பு அல்லர்;
கெட்டாலும், மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு
சுட்டாலும், வெண்மை தரும். 4

அடுத்து முயன்றாலும், ஆகும் நாள் அன்றி,
எடுத்த கருமங்கள் ஆகா;—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 5

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ?—கல் தூண்
பிளந்து இறுவது அல்லால், பெரும் பாரம் தாங்கின்,
தளர்ந்து வளையுமோ தான்? 6

நீர் அளவே ஆகுமாம், நீர் ஆம்பல்; தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம், நுண் அறிவு; மேலைத்
தவத்து அளவே ஆகுமாம், தான் பெற்ற செல்வம்;
குலத்து அளவே ஆகும், குணம். 7

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம் மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே; நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. 8

தீயாரைக் காண்பதுவும் தீதே; திரு அற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே; தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. 9

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்;—தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல், அவர்பொருட்டு,
எல்லார்க்கும் பெய்யும், மழை. 10

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்,
விண்டு உமி போனால், முளையாதாம்;—கொண்ட பேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது, அளவு இன்றி
ஏற்ற கருமம் செயல். 11

மடல் பெரிது, தாழை; மகிழ் இனிது கந்தம்;
உடல் சிறியர் என்று இருக்க வேண்டா;—கடல் பெரிது;
மண் நீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்
உண் நீரும் ஆகிவிடும். 12

கவை ஆகி, கொம்பு ஆகி, காட்டகத்தே நிற்கும்
அவை அல்ல, நல்ல மரங்கள்; சவை நடுவே
நீட்டு ஓலை வாசியா நின்றான், குறிப்பு அறிய
மாட்டாதவன், நல் மரம். 13

கான மயில் ஆட, கண்டு இருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து, தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலுமே,
கல்லாதான் கற்ற கவி. 14

வேங்கை வரிப் புலி நோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனாற்போல், பாங்கு அறியாப்
புல்லறிவாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். 15

'அடக்கம் உடையார் அறிவு இலர்' என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா;—மடைத் தலையில்
ஓடு மீன் ஓட, உறு மீன் வரும் அளவும்,
வாடி இருக்குமாம், கொக்கு. 16

அற்ற குளத்தின் அறு நீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர்; அக் குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார், உறவு. 17

சீரியர் கெட்டாலும் சீரியரே; சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என் ஆகும்?—சீரிய
பொன்னின் குடம் உடைந்தால், பொன் ஆகும்; என் ஆகும்,
மண்ணின் குடம் உடைந்தக்கால்? 18

ஆழ அமுக்கி முகக்கினும், ஆழ் கடல் நீர்
நாழி முகவாது, நால் நாழி;—தோழி!—
நிதியும் கணவனும் நேர்படினும், தம் தம்
விதியின் பயனே பயன். 19

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா;
உடன் பிறந்தே கொல்லும் வியாதி; உடன் பிறவா
மா மலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்;
அம் மருந்து போல்வாரும் உண்டு. 20

இல்லாள் அகத்து இருக்க, இல்லாதது ஒன்று இல்லை;
இல்லாளும் இல்லாளே ஆம் ஆயின், இல்லாள்
வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல், அவ் இல்
புலி கிடந்த தூறு ஆய்விடும். 21

எழுதியவாறே காண்—இரங்கும் மட நெஞ்சே!—
கருதியவாறு ஆமோ, கருமம்? கருதிப் போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்,
முற்பவத்தில் செய்த வினை. 22

கற்பிளவோடு ஒப்பர், கயவர்; கடுஞ் சினத்துப்
பொற்பிளவோடு ஒப்பாரும் போல்வரே; வில் பிடித்து,
நீர் கிழிய எய்த வடுப் போல மாறுமே,
சீர் ஒழுகு சான்றோர் சினம். 23

நல் தாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற்போல்,
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்; கற்பு இலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்; முதுகாட்டில்
காக்கை உகக்கும், பிணம். 24

நஞ்சு உடைமை தான் அறிந்து, நாகம் கரந்து உறையும்;
அஞ்சாப் புறம் கிடக்கும், நீர்ப் பாம்பு;—நெஞ்சில்
கரவு உடையார் தம்மைக் கரப்பர்; கரவார்,
கரவு இலா நெஞ்சத்தவர். 25

மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்,
மன்னனின் கற்றோன் சிறப்பு உடையன்; மன்னற்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை; கற்றோற்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு. 26

கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்;
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம்; மெல்லிய
வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்; கூற்றமே,
இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண். 27

சந்தன மென் குறடு தான் தேய்ந்த காலத்தும்,
கந்தம் குறைபடாது ஆதலால், தம் தம்
தனம் சிறியர்ஆயினும், தார் வேந்தர் கெட்டால்,
மனம் சிறியர் ஆவரோ மற்று? 28

மருவ இனிய சுற்றமும், வான் பொருளும், நல்ல
உருவும், உயர்குலமும், எல்லாம், திரு மடந்தை
ஆம் போது, அவளோடும் ஆகும்; அவள் பிரிந்து
போம் போது, அவளோடும் போம். 29

சாம்தனையும், தீயனவே செய்திடினும், தாம் அவரை
ஆம்தனையும் காப்பர் அறிவு உடையோர்;—மாந்தர்
குறைக்கும்தனையும், குளிர் நிழலைத் தந்து,
மறைக்கும் ஆம் கண்டீர் மரம். 30

# நல்வழி

(ஔவையார்)

## கடவுள் வாழ்த்து

பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்;—கோலம் செய்
துங்கக் கரி முகத்துத் தூ மணியே!—நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## நூல்

புண்ணியம் ஆம்; பாவம் போம்; போன நாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்; எண்ணுங்கால்,
ஈது ஒழிய வேறு இல்லை, எச் சமயத்தோர் சொல்லும்;
தீது ஒழிய, நன்மை செயல்! 1

சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை, சாற்றுங்கால்:
நீதி வழுவா நெறி முறையின், மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்;
பட்டாங்கில் உள்ளபடி. 2

இடும்பைக்கு இடும் பை இயல் உடம்பு இது அன்றே?
இடும் பொய்யை மெய் என்று இராதே; இடும், கடுக;
உண்டாயின், உண்டாகும், ஊழின் பெரு வலி நோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு. 3

எண்ணி ஒரு கருமம் யார்க்கும் செய்யொண்ணுது,
புண்ணியம் வந்து எய்து போது அல்லால்; கண் இல்லான்
மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோல் ஒக்குமே;
ஆம் காலம் ஆகும், அவர்க்கு. 4

வருந்தி அழைத்தாலும், வாராத வாரா;
பொருந்துவன, 'போமின்' என்ருல், போகா; இருந்து ஏங்கி,
நெஞ்சம் புண்ணுக, நெடுந் தூரம் தாம் நினைந்து,
துஞ்சுவதே, மாந்தர் தொழில். 5

உள்ளது ஒழிய, ஒருவர்க்கு ஒருவர் சுகம்
கொள்ளக் கிடையா, குவலயத்தில்; வெள்ளக்
கடல் ஓடி மீண்டு கரை ஏறினல் என்,
உடலோடு வாழும் உயிர்க்கு? 6

எல்லாப் படியாலும் எண்ணினுல், இவ் உடம்பு
பொல்லாப் புழு, மலி நோய்ப் புன் குரம்பை; நல்லார்
அறிந்திருப்பார்; ஆதலினுல், ஆம் கமல நீர்போல்,
பிறிந்திருப்பார்; பேசார், பிறர்க்கு. 7

ஈட்டும் பொருள் முயற்சி எண் இறந்த ஆயினும், ஊழ்
கூட்டும்படி அன்றிக் கூடாவாம்; தேட்டம்
மரியாதை காணும்;—மகிதலத்தீர்!—கேண்மின்;
தரியாது காணும், தனம். 8

ஆற்றுப் பெருக்கு அற்று, அடி சுடும் அந் நாளும், அவ் ஆறு
ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும்; ஏற்றவர்க்கு,
நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனுலும்,
'இல்லை' என மாட்டார், இசைந்து. 9

ஆண்டு ஆண்டுதோறும் அழுது புரண்டாலும்,
மாண்டார் வருவரோ?—மாநிலத்தீர்!—வேண்டா;
நமக்கும் அது வழியே; நாம் போம் அளவும்,
'எமக்கு என்' என்று, இட்டு, உண்டு, இரும். 10

'ஒரு நாள் உணவை ஒழி' என்ருல், ஒழியாய்;
'இரு நாளுக்கு ஏல்' என்ருல், ஏலாய்; ஒரு நாளும்
என் நோ அறியாய்:—இடும்பை கூர் என் வயிறே!—
உன்னேடு வாழ்தல் அரிது. 11

ஆற்றங்கரையின் மரமும், அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும், விழும் அன்றே; ஏற்றம்
உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்;
பழுது உண்டு, வேறு ஓர் பணிக்கு. 12

ஆவாரை யாரே அழிப்பர்? அது அன்றி,
சாவாரை யாரே தவிர்ப்பவர்? ஓவாமல்,
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?—
மெய், அம் புவிஅதன் மேல். 13

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை, பேசுங்கால்,
இச்சை பல சொல்லி இடித்து உண்கை; சிச்சீ!
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது,
உயிர் விடுகை சால உறும். 14

'சிவாயநம!' என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை; உபாயம்
இதுவே; மதி ஆகும்; அல்லாத எல்லாம்
விதியே மதி ஆய்விடும். 15

தண்ணீர் நில நலத்தால்; தக்கோர் குணம் கொடையால்;
கண்ணீர்மை மாறாக் கருணையால்; பெண் நீர்மை
கற்பு அழியா ஆற்றால்; கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதம் ஆம் என்றே அறி. 16

செய் தீவினை இருக்க, தெய்வத்தை நொந்தக்கால்,
எய்த வருமோ, இரு நிதியம்—'வையத்து
அறும் பாவம்' என்ன அறிந்து, அன்று இடார்க்கு, இன்று?
வெறும் பானை பொங்குமோ மேல்? 17

பெற்றார், பிறந்தார், பெரு நாட்டார், பேர் உலகில்,
உற்றார், உகந்தார், என வேண்டார், மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர்; இடாரே,
சரணம் கொடுத்தாலும் தாம். 18

சேவித்தும், சென்று இரந்தும், தெண் நீர்க் கடல் கடந்தும்,
பாவித்தும், பார் ஆண்டும், பாட்டு இசைத்தும், போவிப்பம்—
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்,
நாழி அரிசிக்கே நாம். 19

அம்பி துணை ஆக ஆறு இழிந்தவாறு ஒக்கும்,
கொம்மை முலை பகர்வார் கொண்டாட்டம்; இம்மை
மறுமைக்கும் நன்று அன்று; மா நிதியம் போக்கி,
வெறுமைக்கு வித்து ஆய்விடும். 20

நீரும், நிழலும், நிலம் பொதியும் நெற்கட்டும்,
பேரும், புகழும், பெரு வாழ்வும், ஊரும்,
வரும் திருவும், வாழ்நாளும், வஞ்சம் இல்லார்க்கு என்றும்
தரும்—சிவந்த தாமரையாள்தான். 21

பாடு பட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்து,
கேடு கெட்ட மானிடரே! கேளுங்கள்: கூடு விட்டு இங்கு
ஆவிதான் போயின பின்பு, யாரே அனுபவிப்பார்,
பாவிகாள்! அந்தப் பணம்? 22

வேதாளம் சேருமே; வெள் எருக்குப் பூக்குமே;
பாதாள மூலி படருமே; மூதேவி
சென்று இருந்து வாழ்வளே; சேடன் குடிபுகுமே;—
மன்று ஓரம் சொன்னார் மனை. 23

நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டி பாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்; மாறு இல்
உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ்; பாழே,
மடக்கொடி இல்லா மனை. 24

ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்,
மானம் அழிந்து, மதி கெட்டு, போன திசை
எல்லார்க்கும் கள்ளன் ஆய், ஏழ் பிறப்பும் தீயன் ஆய்,
நல்லார்க்கும் பொல்லன் ஆம்; நாடு! 25

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை,
தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல்,—பத்தும்
பசி வந்திடப் போம் பறந்து. 26

ஒன்றை நினைக்கின், அது ஒழிந்திட்டு, ஒன்று ஆகும்;
அன்றி அது வரினும், வந்து எய்தும்; ஒன்றை
நினையாத முன் வந்து நிற்பினும், நிற்கும்;—
எனை ஆளும் ஈசன் செயல். 27

உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்;
எண்பது கோடி நினைந்து எண்ணுவன; கண் புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை, மண்ணின் கலம் போல,
சாந் துணையும் சஞ்சலமே தான். 28

மரம் பழுத்தால், வௌவாலை,'வா' என்று கூவி,
இரந்து அழைப்பார் யாவரும் அங்கு இல்லை; சுரந்து அமுதம்
கற்று தரல்போல் கரவாது அளிப்பரேல்,
உற்றார், உலகத்தவர். 29

தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார்,
பூந்தாமரையோன் பொறி வழியே;—வேந்தே!—
ஒறுத்தாரை என் செயலாம்? ஊர் எல்லாம் ஒன்று
வெறுத்தாலும் போமோ விதி? 30

இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று; சால
ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று; வழுக்குடைய
வீரத்தின் நன்று விடா நோய்; பழிக்கு அஞ்சாத்
தாரத்தின் நன்று, தனி. 31

ஆறு இடும் மேடும் மடுவும் போல், ஆம் செல்வம்
மாறிடும் ஏறிடும்;—மா நிலத்தீர்!—சோறு இடும்;
தண்ணீரும் வாரும்; தருமமே சார்பு ஆக,
உள் நீர்மை வீறும், உயர்ந்து. 32

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்; வேழத்தில்
பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது; நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப் பாறை, பசு மரத்தின் 33
வேருக்கு நெக்கு விடும்.

கல்லானே ஆனாலும், கைப் பொருள் ஒன்று உண்டாயின்,
எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர்; இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்று எடுத்த தாய் வேண்டாள்;
செல்லாது, அவன் வாயில் சொல். 34

பூவாதே காய்க்கும் மரமும் உள; மக்களுளும்
ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே; தூவா
விரைத்தாலும் நன்று ஆகா வித்து எனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது, உணர்வு. 35

நண்டு, சிப்பி, வேய், கதலி, நாசம் உறும் காலத்தில்,
கொண்ட கரு அளிக்கும் கொள்கைபோல்—ஒண்டொடீஇ!—
போதம், தனம், கல்வி, பொன்ற வரும் காலம் அயல்-
மாதர்மேல் வைப்பார், மனம். 36

வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்து ஆய நூலகத்தும் இல்லை; நினைப்பது எனக்
கண்ணுறுவது அல்லால், கவலை படேல்;—நெஞ்சே!—மெய்
விண் உறுவார்க்கு இல்லை, விதி. 37

நன்று என்றும் தீது என்றும், நான் என்றும் தான் என்றும்,
அன்று என்றும் ஆம் என்றும், ஆகாதே நின்ற நிலை
தான் அது ஆம் தத்துவம் ஆம்; சம்பு அறுத்தார், யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள். 38

முப்பதாம் ஆண்டு அளவில், மூன்று அற்று, ஒரு பொருளைத்
தப்பாமல் தன்னுள் பெறான்ஆயின், செப்பும்
கலை அளவே ஆகும்ஆம் காரிகையார் தங்கள்
முலை அளவே ஆகும் ஆம், மூப்பு. 39

தேவர் குறளும், திரு நான்மறை முடிவும்,
மூவர் தமிழும், முனி மொழியும் கோவை
திருவாசகமும், திருமூலர் சொல்லும்,
ஒரு வாசகம் என்று உணர். 40

# நீதிநெறி விளக்கம்

(குமரகுருபர சுவாமிகள்)

கடவுள் வாழ்த்து

நீரில் குமிழி, இளமை; நிறை செல்வம்
நீரில் சுருட்டும் நெடுந் திரைகள்; நீரில்
எழுத்து ஆகும், யாக்கை, நமரங்காள்!—என்னே,
வழுத்தாதது எம்பிரான் மன்று?

## நூல்

அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல் இசையும் நாட்டும்; உறும் கவல் ஒன்று
உற்றுழியும், கைகொடுக்கும்;—கல்வியின் ஊங்கு இல்லை,
சிற்றுயிர்க்கு உற்ற துணை. 1

தொடங்குங்கால் துன்பம் ஆய், இன்பம் பயக்கும்,
மடம் கொன்று அறிவு அகற்றும் கல்வி; நெடுங் காமம்
முன் பயக்கும் சில் நீர இன்பத்தின்,—முற்றிழாய்!—
பின் பயக்கும் பீழை பெரிது. 2

கல்வியே கற்புடைப் பெண்டிர், அப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங் கவியா, சொல் வளம்
மல்லல் வெறுக்கையா, மாண் அவை மண்ணுறுத்தும்
செல்வமும் உண்டு, சிலர்க்கு. 3

எத் துணைய ஆயினும் கல்வி, இடம் அறிந்து,
உய்த்துணர்வு இல் எனின், இல்லாகும்; உய்த்து உணர்ந்தும்
சொல்வன்மை இன்று எனின், என் ஆகும்? அஃது உண்டேல்,
பொன் மலர் நாற்றம் உடைத்து. 4

அவை அஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவை அஞ்சா ஆகுலச் சொல்லும், நவை அஞ்சி
ஈத்து உண்ணார் செல்வமும், நல்கூர்ந்தார் இன் நலமும்,—
பூத்தலின் பூவாமை நன்று. 5

கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்,
மலரவன் வண் தமிழோர்க்கு ஒவ்வான்;—மலரவன் செய்
வெற்று உடம்பு மாய்வனபோல் மாயா, புகழ் கொண்டு
மற்று இவர் செய்யும் உடம்பு. 6

நெடும் பகல் கற்ற, அவையத்து, உதவாது
உடைந்துளார் உட்குவரும் கல்வி, கடும் பகல்
ஏதிலான்பால் கண்ட இல்லினும் பொல்லாதே;
தீது என்று நீப்பு அரிதால். 7

வருந்தித் தாம் கற்றன ஓம்பாது, மற்றும்
பரிந்து சில கற்பான் தொடங்கல்,—கருந் தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டு, அரிப்பு அரித்து ஆங்கு,
எய்த்துப் பொருள் செய்திடல். 8

எனைத் துணையவேனும், இலம்பாட்டார் கல்வி
தினைத் துணையும் சீர்ப்பாடு இலவாம்;—மனைத்தக்காள்
மாண்பு இலள் ஆயின், மணமகன் நல் அறம்
பூண்ட புலப்படாபோல். 9

இன்சொல்லன் தாழ்நடையன் ஆயினும், ஒன்று இல்லானேல்,
வன் சொல்லின் அல்லது வாய் திறவா: என் சொலினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும், கடல் ஞாலம்;
பித்து உடைய; அல்ல, பிற. 10

இவறன்மை கண்டும், உடையாரை யாரும்
குறையிரந்தும் குற்றேவல் செய்ப;—பெரிதும் தாம்
முற்பகல் நோலாதார், நோற்றாரைப் பின் செல்லல்
கற்பு அன்றே; கல்லாமைஅன்று. 11

கற்றார்க்குக் கல்வி நலனே கலன் அல்லால்,
மற்று ஓர் அணிகலம் வேண்டாவாம்; முற்ற
முழு மணிப் பூணுக்குப் பூண் வேண்டா; யாரே,
அழகுக்கு அழகு செய்வார்? 12

முற்றும் உணர்ந்தவர் இல்லை; 'முழுவதூஉம்
கற்றனம்!' என்று களியற்க;—சிற்றுளியால்
கல்லும் தகரும்; தகரா, கனங்குழாய்!
கொல் உலைக் கூடத்தினால். 13

தம்மின் மெலியாரை நோக்கி, தமது உடைமை
'அம்மா, பெரிது!' என்று அகம் மகிழ்க; தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்து அழிக, 'கற்றது எல்லாம்
எற்றே இவர்க்கு நாம்!' என்று. 14

கல்வி உடைமை, பொருள் உடைமை, என்று இரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும்—இல்லார்
குறை இரந்து தம் முன்னர் நிற்பபோல், தாமும்
தலை வணங்கித் தாழப் பெறின். 15

ஆக்கம் பெரியார், சிறியாரிடைப்பட்ட
மீச்செலவு காணின், நனி தாழ்ப;—தூக்கின்,
மெலியது மேல்மேல் எழச் செல்லச் செல்ல,
வலிது அன்றே தாழும், துலைக்கு? 16

இலக்கிய ஓம்பி, விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையும் தீதே;—'புலப் பகையை
வென்றனம்; நல் ஒழுக்கின் நின்றேம், பிற' என்று,
தம் பாடு தம்மில் கொளின். 17

தன்னை வியப்பிப்பான் தற் புகழ்தல் தீச் சுடர்
நல் நீர் சொரிந்து வளர்த்தற்றால்;—தன்னை
வியவாமை அன்றே வியப்பு ஆவது; இன்பம்
நயவாமை அன்றே நலம். 18

பிறரால் பெருஞ் சுட்டு வேண்டுவான், யாண்டும்
மறவாமே நோற்பது ஒன்று உண்டு: பிறர் பிறர்
சீர் எல்லாம் தூற்றி, சிறுமை புறங்காத்து,
யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல். 19

கற்று, பிறர்க்கு உரைத்து, தாம் நில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக்கு உண்டு, ஓர் வலி உடைமை;—'சொற்ற நீர்
நில்லாதது என்?' என்று நாண உறைப்ப, நேர்ந்து ஒருவன்
சொல்லாமே, சூழ்ந்து சொலல். 20

பிறர்க்குப் பயன் படத் தாம் கற்ற விற்பார்,
தமக்குப் பயன் வேறு உடையார்;—திறப் படூஉம்
தீவினை அஞ்சா விறல் கொண்டு, தென்புலத்தார்
கோவினை வேலை கொளல். 21

கற்பன ஊழ் அற்றார், கல்விக் கழகத்து ஆங்கு
ஒற்கம் இன்று ஊத்தை வாய் அங்காத்தல், மற்றுத் தம்
வல் உரு அஞ்சன்மின், என்பவே, மா, பறவை
புல்லுரு அஞ்சுவபோல். 22

போக்கு அறு கல்வி புலம் மிக்கார்பால் அன்றி
மீக்கொள் நகையினர்வாய்ச் சேரா;—தாக்கு அணங்கும்
ஆண் அவாம் பெண்மை உடைத்து எனினும், பெண் நலம்
பேடு கொளப்படுவது இல். 23

கற்றன கல்லார் செவி மாட்டிக் கையுறாஉம்
குற்றம் தமதே; பிறிது அன்று; முற்று உணர்ந்தும்,
தாம், அவர் தன்மை உணராதார், தம் உணரா
ஏதிலரை நோவது எவன்? 24

வேத்தவை காவார், மிகல் மக்கள்; வேறு சிலர்
காத்தது கொண்டு ஆங்கு உகப்பு எய்தார்;—மாத் தகைய
அந்தப்புரத்தது பூஞை; புறங்கடைய,
கந்து கொல் பூட்கைக் களிறு. 25

குலமகட்குத் தெய்வம் கொழுநனே; மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்; அறவோர்க்கு
அடிகளே தெய்வம்; அனைவோர்க்கும் தெய்வம், 26
இலை முகப் பைம் பூண் இறை.

கண்ணில் சொலிச் செவியின் நோக்கும் இறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே ஆயினும்,—தண்ணளியால்
மன்பதை ஓம்பாதார்க்கு என் ஆம்? வயப் படை மற்று
என் பயக்கும், ஆண் அல்லவர்க்கு? 27

குடி கொன்று இறை கொள்ளும் கோமகற்குக் கற்றா
மடி கொன்று பால் கொளலும் மாண்பே; குடி ஓம்பிக்
கொள்ளுமா கொள்வோற்குக் காண்டுமே, மா நிதியம்
வெள்ளத்தின் மேலும் பல. 28

இன்று கொளற்பால நாளைக் கொளப் பொறான்;
நின்று குறை இரப்ப, நேர்படான்; சென்று ஒருவன்
ஆவன கூறின், எயிறு அலைப்பான்; ஆறு அலைக்கும்
வேடு அலன், வேந்தும் அலன். 29

முடிப்ப முடித்து, பின் பூசுவ பூசி,
உடுப்ப உடுத்து, உண்ப உண்ணு, இடித்து இடித்துக்
கட்டுரை கூறின், செவிக்கொளா கண் விழியா,
நெட்டுயிர்ப்போடு உற்ற பிணம். 30

'ஒற்றின் தெரியா, சிறைப்புறத்து ஓர்தும்!' எனப்
பொன்-தோள் துணையாத் தெரிதந்தும், குற்றம்
அறிவரிது என்று அஞ்சுவதே செங்கோன்மை; சென்று
முறையிடினும், கேளாமை அன்று. 31

ஏதிலார் யாதும் புகல, இறைமகன்
கோது ஓரீஇக் கொள்கை முதுக்குறைவு;—நேர் நின்று,
'காக்கை வெளிது' என்பார் என் சொலார்? 'தாய்க் கொலை
சால்பு உடைத்து' என்பாரும், உண்டு. 32

கண்கூடாப் பட்டது கேடு எனினும், கீழ்மக்கட்கு
உண்டோ உணர்ச்சி? மற்று இல்லாகும்;—மண்டு எரி-
தான் வாய்மடுப்பினும், மாசுணம் கண் துயில்வ;
பேரா, பெருமூச்செறிந்து. 33

நட்புப் பிரித்தல், பகை நட்டல், ஒற்று இகழ்தல்,
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல், தக்கார்
நெடுமொழி கோறல், குணம் பிறிதாதல்,—
கெடுவது காட்டும் குறி. 34

பணியப் படுவார் புறங்கடையராக,
தணிவு இல் களிப்பினால் தாழ்வார்க்கு, அணியது
இளையாள் முயக்கு எனினும், சேய்த்தன்றே, மூத்தாள்
புணர் முலைப் போகம் கொளல். 35

கண் நோக்கு அரும்பா, நகை முகமே நாள்மலரா,
இன்மொழியின் வாய்மையே தீம் காயா, வண்மை
பலமா, நலம் கனிந்த பண்புடையார் அன்றே,
சலியாத கற்ப தரு. 36

வாங்கும் கவளத்து ஒரு சிறிது வாய் தப்பின்,
தூங்கும் களிறோ துயர் உறா; ஆங்கு அது கொண்டு,
ஊரும் எறும்பு இங்கு ஒரு கோடி உய்யுமால்,
ஆரும் கிளையோடு அயின்று. 37

மாகம் சிறுகக் குவித்து நிதிக் குவை,
ஈகையின் ஏக்கழுத்தம் மிக்குடைய—மா கொல்
பகை முகத்த வென் வேலான் பார்வையின் தீட்டும்
நகை முகத்த நன்கு மதிப்பு. 38

களைகணுத் தம் அடைந்தார்க்கு உற்றுழியும், மற்று ஓர்
விளைவு உன்னி வெற்று உடம்பு தாங்கார்—தளர் நடையது
ஊன் உடம்பு என்று, புகழ் உடம்பு ஓம்புதற்கே-
தான் உடம்பட்டார்கள் தாம். 39

தம்முடை ஆற்றலும் மானமும் தோற்று, தம்
இன் உயிர் ஓம்பினும் ஓம்புக!—பின்னர்ச்
சிறு வரை ஆயினும், மன்ற தமக்கு ஆங்கு 40
இறு வரை இல்லை எனின்.

கலன் அழிந்த கற்புடைப் பெண்டிரும், ஐந்து
புலன் ஒருங்கப் பொய் கடிந்தாரும், கொலை ஞாட்பின்
மொய்ம்புடை வீரரும், அஞ்சார்—முரண் மறலி 41
தும்பை முடி சூடினும்.

புழு நெளிந்து, புண் அழுகி, யோசனை நாறும்
கழி முடை நாற்றத்தவேனும்; விழலர்,
விளிவு உன்னி வெய்து உயிர்ப்பர்; மெய்ப் பயன் கொண்டார் 42
சுளியார், சுமை போடுதற்கு.

இகழின் இகழ்ந்தாங்கு, இறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப; இகல் மன்னன்
சீர் வழிப் பட்டதே மண்பதை; மற்று என் செய்யும், 43
நீர் வழிப் பட்ட புணை?

செவி சுடச் சென்று ஆங்கு இடித்து அறிவு மூட்டி,
வெகுளினும் வாய் வெரீஇ, பேரா;—கவுள் மதத்த
கைம்மா வயத்ததோ பாகு? மற்று எத் திறத்தும்,
அம் மாண்பினவே, அமைச்சு. 44

'கைவரும் வேந்தன் நமக்கு' என்று, காதலித்த
செவ்வி தெரியாது உரையற்க!—ஒவ்வொருகால்
எண்மையனேனும், அரியன் பெரிது அம்மா;
கண் இலன்; உள் வெயர்ப்பினன். 45

பழமை கடைப்பிடியார், கேண்மையும் பாரார்,
கிழமை பிறிதொன்றும் கொள்ளார், வெகுளின் மன்;
காதன்மை உண்டே, இறை மாண்டார்க்கு? ஏதிலரும்
ஆர்வலரும் இல்லை, அவர்க்கு. 46

'மன்னர் புறங்கடை காத்து வறிதே, யாம்
எம் நலம் காண்டும்?' என்று எள்ளற்க! பல் நெடு நாள்
காத்தவை எல்லாம், கடை முறை போய்க் கைகொடுத்து,
வேத்தவையின் மிக்குச் செயும். 47

உறுதி பயப்ப கடைபோகாவேனும்,
இறுவரைகாறும் முயல்ப;—இறும் உயிர்க்கும்
ஆயுள் மருந்து ஒழுக்கல் தீது அன்றால்; அல்லனபோல்
ஆவனவும் உண்டு, சில. 48

'முயலாது வைத்து, முயற்று இன்மையாலே
உயல் ஆகா, ஊழ்த் திறத்த' என்றார்;—மயலாயும்,
ஊற்றம் இறு விளக்கம், 'ஊழ் உண்மை காண்டும்!' என்று,
ஏற்றார், எறி கால் முகத்து. 49

உலையா முயற்சி களைகணா, ஊழின்
வலி சிந்தும் வன்மையும் உண்டே;—உலகு அறியப்
பால்முளை தின்று மறலி உயிர் குடித்த
கான்முளையே போலும், கரி. 50

காலம் அறிந்து, ஆங்கு இடம் அறிந்து, செய் வினையின்
மூலம் அறிந்து, விளைவு அறிந்து, மேலும் தாம்
சூழ்வன சூழ்ந்து, துணைமை வலி தெரிந்து,
ஆள்வினை ஆளப் படும். 51

மெய் வருத்தம் பாரார்; பசி நோக்கார்; கண் துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்; செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்;—
கருமமே கண்ணாயினார். 52

சிறிய பகை எனினும், ஓம்புதல் தேற்றார்,
பெரிதும் பிழைபாடு உடையர்;—நிறை கயத்
தாழ் நீர் மடுவில் தவளை குதிப்பினும்,
யானை நிழல் காண்பு அரிது. 53

புறப்பகை கோடியின் மிக்கு உறினும், அஞ்சார்;
அகப்பகை ஒன்று அஞ்சிக் காப்ப;—அனைத்து உலகும்
சொல் ஒன்றின் யாப்பார் பரிந்து ஓம்பிக் காப்பவே,
பல் காலும் காமப் பகை. 54

புறம் நட்டு அகம் வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு, வேருதல் வேண்டும்; கழி பெருங்
கண்ணோட்டம் செய்யார்;—கருவி இட்டு ஆற்றுவார்
புண் வைத்து மூடார் பொதிந்து. 55

நட்பிடைக் குய்யம் வைத்து, எய்யா வினை சூழ்ந்து,
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத் திட்பம் ஆம்
நாள் உலந்தது அன்றே; நடுவன் நடு இன்மை
வாளா கிடப்பன், மறந்து. 56

மனத்த கறுப்பு எனின், நல்ல செயினும்,
அனைத்து எவையும் தீயவே ஆகும்; எனைத்துணையும்
தீயவே செய்யினும் நல்லவாக் காண்பவே,
மாசு இல் மனத்தினவர். 57

இனியவர் என் சொலினும் இன் சொல்லே; இன்னார்
கனியும் மொழியும் கடுவே;—அனல் கொளுந்தும்
வெங்காரம் வெய்துஎனினும், நோய் தீர்க்கும்; மெய் பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும், கொலும். 58

பொய், குறளை, வன்சொல், பயனில, என்று இந் நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக் காத்து, மெய்யில்
புலம் ஐந்தும் காத்து, மனம் மாசு அகற்றும்
நலம் அன்றே, நல் ஆறு எனல்? 59

நல் ஆறு ஒழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்,
அல்லன செய்தற்கு ஒருப்படார்;—பல் பொறிய
செங் கண் புலிஏறு அறப் பசித்தும் தின்னுவாம்,
பைங் கண் புனத்த பைங் கூழ். 60

குலம் விற்றுக் கொள்ளும் வெறுக்கையும், வாய்மை
நலம் விற்றுக் கொள்ளும் திருவும், தவம் விற்று ஆங்கு
ஊன் ஓம்பும் வாழ்வும், உரிமை விற்று உண்பதூஉம்,—
தான் ஓம்பிக் காத்தல் தலை. 61

இடை தெரிந்து, அச்சுறுத்து, வஞ்சித்து, எளியார்
உடைமை கொண்டு, ஏமாப்பார் செல்வம், மட நல்லார்
பொம்மல் முலைபோல் பருத்திடினும், மற்று அவர்
நுண் இடைபோல் தேய்ந்து விடும். 62

பெற்ற சிறுக, பெறாத பெரிது உள்ளும்
சிற்றுயிர்க்கு ஆக்கம் அரிது அம்மா!—முற்றும்
வர வர வாய்மடுத்து, வல் விராய் மாய,
எரி தழல் மாயாது இரா. 63

தம் தம் நிலைக்கும் குடிமைக்கும் தப்பாமே,
ஒத்த கடப்பாட்டில் தாள் ஊன்றி, எய்த்தும்
அறங்கடையில் செல்லார், பிறன் பொருளும் வெஃகார்
புறங்கடையது ஆகும், பொருள். 64

பொதுமகளே போல்ப, தலையாயார் செல்வம்;
குலமகளே, ஏனையோர் செல்வம்; கலன் அழிந்த
கைம்மையார் பெண்மை நலம்போல், கடையாயார்
செல்வம் பயன்படுவது இல். 65

வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின், மற்றையோன்
நல்குரவே போலும் நனி நல்ல; கொன்னே
'அருள் இலன், அன்பு இலன், கண்ணறையன்' என்று
பலரால் இகழப்படான். 66

ஈகை அரிது எனினும், இன்சொலினும், நல்கூர்தல்
ஓஒ கொடிது கொடிது அம்மா!—நா கொன்று
தீவினைக் கம்மியனால் வாய்ப்பூட்டு இடப்படின், மற்று
ஆ! ஆ! இவர் என் செய்வார்? 67

சொல்வன்மை உண்டு எனின், கொன்னே விடுத்து ஒழிதல்
நல்வினை கோறலின் வேறு அல்ல; வல்லைத் தம்
ஆக்கம் கெடுவது உளதுஎனினும், அஞ்சுபவோ,
வாக்கின் பயன் கொள்பவர்? 68

சிறு முயற்சி செய்து ஆங்கு உறு பயன் கொள்ளப்
பெறும் எனில், தாழ்வரோ? தாழார்—அறன் அல்ல
எண்மைய ஆயினும் கைவிட்டு, அரிதுஎனினும்
ஒண்மையின் தீர்ந்து ஒழுகலார். 69

‘செயக் கடவ அல்லனவும் செய்தும்மன்’ என்பார்
நயத்தகு நாகரிகம் என் ஆம்?—செயிர்த்து உரைப்பின்,
நெஞ்சு நோம் என்று தலை துமிப்பான் தண் அளிபோல்,
எஞ்சாது எடுத்து உரைக்கற்பாற்று. 70

அல்லன செய்யினும், ஆகுலம் கூழாக் கொண்டு,
ஒல்லாதார் வாய் விட்டு உலம்புப; வல்லார்
பிறர் பிறர் செய்பபோல் செய்தக்க செய்து ஆங்கு
அறிமடம் பூண்டு நிற்பார். 71

பகை இன்று, பல்லார் பழி எடுத்து ஓதி,
நகை ஒன்றே நன் பயனுக் கொள்வான், பயம் இன்று,
மெய் விதிர்ப்புக் காண்பான், கொடிறு உடைத்துக் கொல்வான்போல்,
கை விதிர்த்து அஞ்சப்படும். 72

தெய்வம் உளது என்பார் தீய செயப் புகின்,
தெய்வமே கண் இன்று நின்று ஒறுக்கும்; தெய்வம்
இலது என்பார்க்கு இல்லை;—தம் இன் புதல்வர்க்கு அன்றே,
பல காலும் சொல்வார் பயன்? 73

தீய செயல் செய்வார் ஆக்கம் பெருகினும்,
தீயன தீயனவே, வேறு அல்ல; தீயன
நல்லன ஆகாவாம்—நா இன்புற நக்கி,
கொல்லும் கவயமாப்போல். 74

நன் மக்கள் செந் நாத் தழும்பு இருக்க, நாள்வாயும்
செந் நெறிச் செல்வாரின் கீழ் அல்லர்—முன்னைத் தம்
ஊழ் வலி உன்னி, பழி நாணி, உள் உடைவார்,
தீய செயினும் சில. 75

பிறன் வரை நின்றாள் கடைத்தலைச் சேறல்
அறன் அன்றே; ஆயினும் ஆக; சிறு வரையும்
நல் நலத்தது ஆயினும் கொள்க! நலம் அன்றே;
மெய்ந் நடுங்க உள் நடுங்கு நோய்! 76

கருமம் சிதையாமே, கல்வி கெடாமே,
தருமமும் தாழ்வு படாமே, பெரிதும் தம்
இல் நலமும் குன்றாமே, ஏர் இளங் கொம்பு அன்னார்
நல் நலம் துய்த்தல் நலம். 77

கொலை அஞ்சார்; பொய்ந் நாணார்; மானமும் ஓம்பார்;
களவு ஒன்றோ, ஏனையவும் செய்வார்; பழியோடு
பாவம் இஃது என்னார்; பிறிது மற்று என் செய்யார்?—
காமம் கதுவப்பட்டார். 78

திருவினும் நல்லாள் மனைக்கிழத்தியேனும்,
பிறன் மனைக்கே பீடு அழிந்து நிற்பர்—நறுவிய
வாயினவேனும் உமிழ்ந்து, கடுத் தின்னும்
தீய விலங்கின் சிலர். 79

கற்பு உடுத்து, அன்பு முடித்து, நாண் மெய்ப் பூசி,
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பேறு
என்பது ஓர் ஆக்கமும் உண்டாயின், இல் அன்றே,
கொண்டாற்குச் செய் தவம் வேறு. 80

ஏந்து எழில் மிக்கான், இளையான், இசை வல்லான்,
காந்தையர் கண் கவர் நோக்கத்தான், வாய்ந்த
நயனுடை இன்சொல்லான், கேள் எனினும், மாதர்க்கு
அயலார்மேல் ஆகும், மனம். 81

கற்பு இல் மகளின், நலம் விற்று உணவு கொளும்
பொன்-தொடி நல்லார் நனி நல்லர்;—மற்றுத் தம்
கேள்வற்கும், ஏதிலர்க்கும், தங்கட்கும், தம் கிளைஞர்
யாவர்க்கும், கேடு சூழார். 82

முறையும் குடிமையும் பான்மையும் நோக்கார்;
நிறையும் நெடு நாணும் பேணார்; பிறிதும் ஒரு
பெற்றிமை பேதைமைக்கு உண்டே?—பெரும் பாவம்,
கற்பு இல்-மகளிர் பிறப்பு! 83

பெண்மை வியவார்; பெயரும் எடுத்து ஓதார்;
கண்ணொடு நெஞ்சு உறைப்ப நோக்குறார்; பண்ணொடு
பாடல் செவி மடார்; பண்பு அல்ல பாராட்டார்;—
வீடு இல் புலப் பகையினர். 84

துயில் சுவையும், தூ நல்லார் தோள் சுவையும், எல்லாம்,
அயில் சுவையின் ஆகுவ என்று எண்ணி, அயில் சுவையும்
பித்து உணக் கொள்பபோல் கொள்ப, பிறர் சிலர் போல்
மொத்துண மொய்ம்பினவர். 85

அன்பொடு அருள் உடையரேனும், உயிர் நிலை மற்று
என்பு இயக்கம் கண்டும், புறந்தரார்;—புன் புலால்
பொய்க் குடில் ஓம்புவரோ, போதத்தால் தாம் வேய்ந்த
புக்கில் குடி புகுதுவார்? 86

சிற்றின்பம் சில் நீரது ஆயினும், அஃது உற்றார்,
மற்று இன்பம் யாவையும் கைவிடுப; முற்றும் தாம்
பேர் இன்ப மாக் கடல் ஆடுவார் வீழ்பவோ,
பார் இன்பப் பாழ்ங் கும்பியில்? 87

எவ் வினையரேனும், இளைவிழைச்சு ஒன்று இலரேல்,
தெவ்வும் திசை நோக்கிக் கைதொழூஉம்; அவ் வினை
காத்தல் இலரேல், எனைத் துணையர் ஆயினும்,
தூர்த்தரும் தூர்ப்பார், அலர். 88

பரபரப்பினோடே பல பல செய்து, ஆங்கு
இரவு பகல் பாழுக்கு இறைப்ப; ஒருவாற்றான்
நல் ஆற்றின் ஊக்கின் பதறிக் குலைகுலைப;
எவ்வாற்றான் உய்வார் இவர்? 89

'இளையம்; முது தவம் ஆற்றுதும் நோற்று' என்று,
உளைவு இன்று கண்பாடும் ஊழே, விளிவு இன்று
வாழ்நாள் வரம்பு உடைமை காண்பரேல்; காண்பாரும்,
தாழாமே நோற்பார், தவம். 90

நல்லவை செய்யத் தொடங்கினும், நோனுமே
அல்லன அல்லவற்றின் கொண்டு உய்க்கும்—எல்லி
வியன் நெறிச் செல்வாரை ஆறு அலைத்து உண்பார்
செலவு பிழைத்து உய்ப்பபோல். 91

நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப் போர்வை
கஞ்சுகம் அன்று; பிறிது ஒன்றே;—கஞ்சுகம்
எப் புலமும் காவாமே, மெய்ப் புலம் காக்கும்; மற்று
இப் புலமும் காவாது இது. 92

வஞ்சித்து ஒழுகும் மதியிலிகாள்! 'யாவரையும்
வஞ்சித்தேம்' என்று மகிழன்மின்; 'வஞ்சித்த
எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல்!' என்று அஞ்சி
அங்கம் குலைவது அறிவு. 93

மறை வழிப்பட்ட பழிமொழி, தெய்வம்
பறை அறைந்தாங்கு ஓடிப் பரக்கும்;—கழி முடைப்
புன் புலால் நாற்றம் புறம் பொதிந்து மூடினும்,
சென்று உதைக்கும் சேயார் முகத்து. 94

மெலியார் விழினும் ஒருவாற்றான் உய்ப;
வலியார் மற்று ஒன்றானும் உய்யார்; நிலை தப்பி,
நொய்ய சழக்கு என வீழாவாம்; வீழினும்,
உய்யுமால்; உய்யா, பிற. 95

இசையாத போலினும் மேலையோர் செய்கை
வசை ஆகா, மற்றையோர்க்கு அல்லால்;—பசு வேட்டு,
தீ ஓம்பி, வான் வழக்கம் காண்பாரை ஒப்பவே,
ஊன் ஓம்பி ஊன் தின்பவர்? 96

எவர் எவர் எத் திறத்தர், அத்திறத்தராய் நின்று,
அவர் அவர்க்கு ஆவன கூறி, எவர் எவர்க்கும்
உப்பாலாய் நிற்ப, மற்று எம் உடையார்—தம் உடையான்
எப்பாலும் நிற்பது என. 97

மெய் உணர்ந்தார், பொய்ம் மேல் புலம் போக்கார்; மெய் உணர்ச்சி
கைவருதல் கண்ணாப் புலம் காப்பார்; மெய் உணர்ந்தார்
காப்பே நிலையா, பழி நாணம் நீள் கதவா,
சேப்பார் நிறைத் தாழ் செறித்து. 98

கற்றுத் துறை போய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல்,—முற்றத்
துறந்தார்க்கு மெய் உணர்வில் தோன்றுவதே இன்பம்;
இறந்த எலாம் துன்பம் அலாது இல். 99

கற்றாங்கு அறிந்து அடங்கி, தீது ஒரீஇ, நன்று ஆற்றி,
பெற்றது கொண்டு மனம் திருத்தி, பற்றுவதே
பற்றுவதே பற்றி, பணி அற நின்று ஒன்று உணர்ந்து,
நிற்பாரே—நீள் நெறிச் சென்றார். 100

ஐயம் திரிபு இன்று, அளந்து உத்தியின் தெளிந்து,
மெய் உணர்ச்சிக் கண் விழிப்பத் தூங்குவார் தம் உளே
காண்பதே காட்சி; கனவு நனவு ஆகப்
பூண்பதே தீர்ந்த பொருள். 101

# நன்னெறி

*(சிவப்பிரகாச சுவாமிகள்)*

*கடவுள் வாழ்த்து*

*மின் எறி சடாமுடி விநாயகன் அடி தொழ,*
*நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.*

## நூல்

*என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணும்,*
*சென்று பொருள் கொடுப்பர், தீது அற்றோர்; துன்று சுவை—*
*பூவின் பொலிகுழலாய்!—பூங் கை புகழவோ,*
*நாவிற்கு உதவும் நயந்து?* 1

*மாசு அற்ற நெஞ்சு உடையார் வன்சொல் இனிது; ஏனையவர்*
*பேசுற்ற இன்சொல் பிறிது என்க! ஈசற்கு*
*நல்லோன் எறி சிலையோ,—நன்னுதால்!—ஒண் கருப்பு*
*வில்லோன் மலரோ, விருப்பு?* 2

*தங்கட்கு உதவிலர் கைத் தாம் ஒன்று கொள்ளின், அவர்*
*தங்கட்கு உரியவரால் தாம் கொள்க!—தங்க நெடுங்*
*குன்றினால் செய்தனைய கொங்கையாய்!—ஆவின்பால்*
*கன்றினால் கொள்ப, கறந்து.* 3

*பிறர்க்கு உதவி செய்யார் பெருஞ் செல்வம் வேறு*
*பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறு ஆம்;—பிறர்க்கு உதவி*
*செய்யாக் கருங் கடல் நீர், சென்று புயல், முகந்து,*
*பெய்யாக் கொடுக்கும், பிறர்க்கு.* 4

*நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்,*
*நோக்கின், அவர் பெருமை நொய்து ஆகும்;—பூக் குழலாய்!—*
*நெல்லின் உமி சிறிது நீங்கி, பழமைபோல்*
*புல்லினும், திண்மை நிலை போம்.* 5

காதல் மனையாளும் காதலனும் மாறு இன்றித்
தீது இல் ஒரு கருமம் செய்பவே;—ஓது கலை
எண் இரண்டும் ஒன்றும் மதி என் முகத்தாய்!—நோக்குமால்
கண் இரண்டும் ஒன்றையே காண். 6

'கடலே அனையம் யாம், கல்வியால்!' என்னும்
அடல் ஏறு அனைய செருக்கு ஆழ்த்தி விடலே;—
முனிக்கு அரசு கையால் முகந்து, முழங்கும்
பனிக் கடலும், உண்ணப்படும். 7

உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க!—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங் கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு! 8

மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்,
வலியோர்தமைத் தாம் மருவில்;—பலி ஏல்
கடவுள் அவிர் சடைமேல் கட்செவி அஞ்சாதே,
படர் சிறைய புள்ளரசைப் பார்த்து. 9

தம் குறை தீர்வு உள்ளார், தளர்ந்து, பிறர்க்கு உறூஉம்
வெங் குறை தீர்க்கிற்பார், விழுமியோர்;—திங்கள்
கறை இருளை நீக்கக் கருதாது, உலகில்
நிறை இருளை நீக்கும், மேல் நின்று. 10

பொய்ப் புலன்கள் ஐந்தும் நோய், புல்லியர்பால் அன்றியே,
மெய்ப் புலவர்தம்பால் விளையாவாம்;—துப்பின்
சுழற்றுங்கொல் கல் தூணைச் சூறுவளி? போய்ச்
சுழற்றும், சிறு புன் துரும்பு. 11

வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில்
பொருந்துதல்தானே புதுமை!—திருந்திழாய்!—
சீத நீர் பொள்ளல் சிறு குடத்து நில்லாது
வீதலோ, நிற்றல் வியப்பு? 12

பெருக்கமொடு சுருக்கம் பெற்ற பொருட்கு ஏற்ப
விருப்பமொடு கொடுப்பர், மேலோர்;—சுரக்கும்
மலை அளவு நின்ற முலை மாதே!—மதியின்
கலை அளவு நின்ற, கதிர். 13

‘தொலையாப் பெருஞ் செல்வத் தோற்றத்தோம்!’ என்று,
தலையாயவர் செருக்குச் சார்தல் இலையால்;—
இரைக்கும் வண்டு ஊதும் மலர் ஈர்ங்கோதாய்!—மேரு
வரைக்கும் வந்தன்று வளைவு. 14

இல்லானுக்கு அன்பு இங்கு, இடம் பொருள் ஏவல் மற்று
எல்லாம் இருந்தும், அவற்கு என் செய்யும்?—நல்லாய்!—
மொழி இலார்க்கு ஏது முதுநூல்? தெரியும்
விழி இலார்க்கு ஏது விளக்கு? 15

தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்து, உயர்ந்தோர்,
தம்மை மதியார், தமை அடைந்தோர் தம்மின்
இழியினும், செல்வர், இடர் தீர்ப்பர்;—அல்கு
கழியினும் செல்லாதோ, கடல்? 16

‘எந்தை நல்கூர்ந்தான், இரப்பார்க்கு ஈந்து’ என்று அவன்
மைந்தர் தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீஇ!—
நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவும் கனி. 17

இன்சொலால் அன்றி, இரு நீர் வியன் உலகம்,
வன்சொலால் என்றும் மகிழாதே;—பொன் செய்
அதிர் வளையாய்!—பொங்காது அழற் கதிரால், தண்ணென்
கதிர் வரவால் பொங்கும், கடல். 18

நல்லோர் வரவால் நகை முகம் கொண்டு இன்புறீஇ,
அல்லோர் வரவால் அழுங்குவார், வல்லோர்;—
திருந்தும், தளிர் காட்டித் தென்றல் வரத் தேமா;
வருந்தும், சுழல் கால் வர. 19

பெரியவர் தம் நோய்போல், பிறர் நோய் கண்டு, உள்ளம்
எரியின் இழுது ஆவர் என்க;—தெரியிழாய்!—
மண்டு பிணியால் வருந்து பிற உறுப்பைக்
கண்டு, கலுழுமே, கண். 20

எழுத்து அறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்து அறிவார்க் காணின் இலை ஆம்;—எழுத்து அறிவார்
ஆயும் கடவுள் அவிர் சடை முன் கண்ட அளவில்
வீயும், சுர நீர் மிகை. 21

ஆக்கும் அறிவான் அலது, பிறப்பினால்
மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க!—நீக்கு-
பவர் ஆர், அரவின் பரு மணி கண்டு? என்றும்
கவரார், கடலின் கடு. 22

பகர்ச்சி மடவார் பயில, நோன்பு ஆற்றல்
திகழ்ச்சி தரு நெஞ்சத் திட்பம் நெகிழ்ச்சி
பெறும்;—பூரிக்கின்ற முலைப் பேதாய்!—பல கால்
எறும்பு ஊரக் கல் குழியுமே. 23

உண்டு குணம் இங்கு ஒருவர்க்கு எனினும், கீழ்
கொண்டு புகல்வது அவர் குற்றமே;—வண்டு மலர்ச்
சேக்கை விரும்பும் செழும் பொழில்வாய், வேம்பு அன்றோ,
காக்கை விரும்பும் கனி? 24

கல்லா அறிவின் கயவர்பால் கற்று உணர்ந்த
நல்லார் தமது கனம் நண்ணாரே;—வில் ஆர்
கணையின் பொலியும் கருங்கண்ணாய்!—நொய்து ஆம்
புணையில் புகும் ஒண் பொருள். 25

உடலின் சிறுமை கண்டு, ஒண் புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்;—மடவரால்!—
கண் அளவாய் நின்றதோ, காணும் கதிர் ஒளிதான்?
விண் அளவு ஆயிற்றோ? விளம்பு! 26

கைம்மாறு உகவாமல், கற்று அறிந்தோர், மெய் வருந்தி,
தம்மால் இயல் உதவி தாம் செய்வர்;—அம்மா!
முளைக்கும் எயிறு முதிர் சுவை நாவிற்கு
விளைக்கும், வலியன தாம் மென்று. 27

முனிவினும் நல்குவர், மூதறிஞர்; உள்ளக்
கனிவினும் நல்கார், கயவர்;—நனி விளைவு இல்
காயினும் ஆகும், கதலிதான்; எட்டி பழுத்து-
ஆயினும் ஆமோ? அறை! 28

உடற்கு வரும் இடர், நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர்,
அடுக்கும் ஒரு கோடி ஆக, நடுக்கம் உறார்—
பண்ணின் புகலும் பனி மொழியாய்!—அஞ்சுமோ,
மண்ணில் புலியை மதி மான்? 29

கொள்ளும் கொடுங் கூற்றம் கொல்வான் குறுகுதல்முன்,
உள்ளம் கனிந்து அறம் செய்து உய்கவே!—வெள்ளம்
வருவதற்கு முன்னர், அணை கோலி வையார்,
பெருகுதற்கண் என் செய்வார்? பேசு! 30

பேர் அறிஞர் தாக்கும் பிறர் துயரம் தாங்கியே,
வீரமொடு காக்க விரைகுவார்;—நேரிழாய்!—
மெய் சென்று தாக்கும் வியன் கோல் அடி தன்மேல்
கை சென்று தாக்கும் கடிது. 31

பன்னும் பனுவல் பயன் தேர் அறிவு இலார்
மன்னும் அறங்கள் வலி இலவே;—நன்னுதால்!—
காழ் ஒன்று உயர் திண் கதவு வலி உடைத்தோ,
தாழ் ஒன்று இலதாயின்தான்? 32

எள்ளாது இருப்ப, இழிஞர் போற்றற்கு உரியர்;
விள்ளா அறிஞர் அது வேண்டாரே:—தள்ளாக்
கரை காப்பு உளது நீர் கட்டு குளம்; அன்றிக்
கரை காப்பு உளதோ, கடல்? 33

அறிவுடையார் அன்றி, அது பெறார் தம்பால்
செறி பழியை அஞ்சார், சிறிதும்;—பிறை நுதால்!—
வண்ணம் செய் வாள் விழியே அன்றி, மறை குருட்டுக்
கண் அஞ்சுமோ, இருளைக் கண்டு? 34

கற்ற அறிவினரைக் காமுறுவர், மேன்மக்கள்;
மற்றையர்தாம் என்றும் மதியாரே;—வெற்றி நெடு
வேல் வேண்டும் வாள் விழியாய்!—வேண்டா, புளிங்காடி;
பால் வேண்டும், வாழைப் பழம். 35

தக்கார்க்கே ஈவார், தகார்க்கு அளிப்பார் இல், என்று,
மிக்கார்க்கு உதவார், விழுமியோர்;—எக்காலும்
நெல்லுக்கு இறைப்பதே நீர் அன்றி, காட்டு முளி
புல்லுக்கு இறைப்பரோ, போய்? 36

பெரியார் முன் தன்னைப் புனைந்து உரைத்த பேதை
தரியாது உயர்வு அகன்று தாழும்; தெரியாய்கொல்—
பொன் உயர்வு தீர்த்த புணர் முலையாய்!—விந்தமலை
தன் உயர்வு தீர்ந்தன்று, தாழ்ந்து! 37

நல்லார் செயும் கேண்மை நாள்தோறும் நன்று ஆகும்;
அல்லார் செயும் கேண்மை ஆகாதே;—நல்லாய்! கேள்:
காய் முற்றின், தின் தீம் கனி ஆம்; இளந் தளிர் நாள்
போய் முற்றின், என் ஆகிப் போம்? 38

கற்று அறியார் செய்யும் கடு நட்பும், தாம் கூடி
உற்றுழியும் தீமை நிகழ்வு உள்ளதே—பொற்றொடீஇ!—
சென்று படர்ந்த செழுங் கொடி மென் பூ மலர்ந்த
அன்றே மணம் உடையது ஆம். 39

பொன் அணியும் வேந்தர், புனையாப் பெருங் கல்வி
மன்னும் அறிஞரைத் தாம் மற்று ஒவ்வார்; மின்னும் அணி
பூணும் பிற உறுப்பு,—பொன்னே!—அது புனையாக்
காணும் கண் ஒக்குமோ? காண்! 40

## நூல்களின் அகரவரிசை


| நூல் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| ஆத்திசூடி | ... | ... | ... | 3-6 |
| உலக நீதி | ... | ... | ... | 16-19 |
| கொன்றை வேந்தன் | ... | ... | ... | 7-10 |
| நல்வழி | ... | ... | ... | 24-28 |
| நன்னெறி | ... | ... | ... | 42-47 |
| நீதிநெறி விளக்கம் | ... | ... | ... | 29-41 |
| வாக்குண்டாம் | ... | ... | ... | 20-23 |
| வெற்றி வேற்கை | ... | ... | ... | 11-15 |



Printed by S. Viswanathan at the Central Art Press, 'Acton Lodge', 11 McNichol Road, Chetput, Madras 31.